**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – 2021-2022 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய வீடற்ற 443 பழங்குடி இனத்தைச் சார்ந்த இருளர் இன குடும்பங்களுக்கு இலவச வீடு கட்டித்தர ரூ.19,37,81,490/- – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே1(2)) துறை**

**அரசாணை (நிலை) எண்.16** **நாள் 18.03.2022**

பங்குனி மாதம் 4-ஆம் நாள்,
பிலவ வருடம்,
திருவள்ளுவர் ஆண்டு 2053

**படிக்கப்பட்டது :-**

1. இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.பமே/அ3/5009/ 2021, நாள் 16.09.2021 மற்றும் பமே/அ1/ 12132/2021, நாள் 10.02.2022.
2. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை – 15 அவர்களின் கடிதம் ந.க.எண். 59402/2021/RHS 1.1, நாள் 22.01.2022.

*******

**ஆணை :-**

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் 2021-2022 ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் கீழ்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்.

"பெரும்பாலான பழங்குடியின மக்கள் பொருளாதாரத்தில் பின்தங்கி வாழ்ந்து வருகின்றனர். வீடற்ற பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு காஞ்சிபுரம் மாவட்டத்தில் பட்டா வழங்கப்பட்ட 443 இருளர் இன பழங்குடியினர் குடும்பங்களுக்கு தலா ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.13.29 கோடி மதிப்பீட்டில் 443 புதிய வீடுகள் கட்டப்படும்."

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநரின் கடிதத்தில், 2021-2022-ம் விகித அட்டவணை (Schedule of Rate) கணக்கீட்டின்படி 269 சதுர அடியில் தனிவீடு ஒன்று கட்டுவதற்கான மதிப்பீடு கீழ்க்கண்டவாறு தெரிவித்ததுடன், இதில் 90 மனித சக்தி நாட்கள் கூலியாக ரூ.24.570/- ஒரு வீட்டிற்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (MGNREGS) மூலம் வழங்கலாம் என்றும் தெரிவித்துள்ளது.

| வ. எண். | நிலப்பகுதியின் வகைப்பாடு | ஒரு வீட்டின் அலகு தொகை | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படும் தொகை | பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அனுமதிக்க கோரும் தொகை |
|---|---|---|---|---|
| 1 | சமதளபரப்பில் (Plain)தனி வீடு கழிப்பறையுடன் (மின் இணைப்பு வசதி மற்றும் அடித்தள கட்டமைப்பு உட்பட) (with electrification, Grade beam & Stup Column) கட்டுவதற்கு வீடு ஒன்றுக்கு தேவைப்படும் தொகை | 4,62,000 | 24,570 | 4,37,430 |
| 2. | மலைப்பகுதியில் (Hills) தனி வீடு கழிப்பறையுடன் (மின் இணைப்பு வசதி மற்றும் அடித்தள கட்டமைப்பு உட்பட) (with electrification, Grade beam & Stup Column) கட்டுவதற்கு வீடு ஒன்றுக்கு தேவைப்படும் தொகை | 5,20,000 | 24,570 | 4,95,430 |
| 3. | கடின மண்பகுதியில் (Pile Foundation) தனி வீடு கழிப்பறையுடன் (மின் இணைப்பு வசதி மற்றும் அடித்தள கட்டமைப்பு உட்பட) (with electrification, Grade beam & Stup Column) கட்டுவதற்கு வீடு ஒன்றுக்கு தேவைப்படும் தொகை | 4,66,000 | 24,570 | 4,41,430 |

3. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒன்றிய அரசின் 31.12.2021 நாளிட்ட கடிதத்தில், நீலகிரி, காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் 387 வீடுகள் கட்டுவதற்கு ஒரு வீட்டிற்கு தலா ரூ.3.5 இலட்சம் மதிப்பீட்டில், ரூ.13,54,50,000/- நிதி விடுவிக்கப்பட்டுள்ள நிதியினைக் கொண்டும், மேலும், பல்வேறு திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டு, செலவிடப்படாத நிதி ரூ.2,11,50,000/-னைக் கொண்டும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருளர் இன மக்களுக்கு வீடுகள் கட்ட பயன்படுத்தி கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

4. மேற்காணும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்ததன் அடிப்படையில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய வீடற்ற கீழ்க்காணும் 443 பழங்குடி இனத்தைச் சார்ந்த இருளர் இன குடும்பங்களுக்கு இலவச வீடு கட்டித்தர ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் (சமதளப்பரப்பு) மதிப்பீட்டின்படி ஒரு வீட்டிற்கு தலா ரூ.4,62,000/- நிர்ணயம் செய்யப்பட்ட மொத்தத் தொகையில் ரூ.24,570/- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழும், பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு வீட்டிற்கு அனுமதிக்கக் கோரும் தொகை ரூ.4,37,430/- வீதம் 443 வீடுகள் கட்டுவதற்கு ரூ.19,37,81,490/-ல்(ரூபாய் பத்தொன்பது கோடியே முப்பத்தேழு இலட்சத்து எண்பத்தோராயிரத்து நானூற்று தொண்ணூறு மட்டும்) வீடுகள் கட்ட அனுமதி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக, பழங்குடியினர் நல இயக்குநரால் முந்தைய ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட செலவிடப்படாத நிதி ரூ.2,11,50,000/-னை பயன்படுத்தி கொள்ள அனுமதிக்கப்படுகிறது. மேலும், மீதமுள்ள தொகைக்கு ரூ.13,54,50,000/-யை அழிந்து வரும் நிலையிலுள்ள பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும், ரூ. 3,71,81,490/-னை, பழங்குடியின மக்கள் அதிகமாக வாழும் கிராமப் பகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் திட்டத்தின்கீழும், ஆக மொத்தத் தொகை ரூ.19,37,81,490/-க்கு (ரூபாய் பத்தொன்பது கோடியே முப்பத்தேழு இலட்சத்து எண்பத்தோராயிரத்து நானூற்று தொண்ணூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | தாலுக்கா | கிராமம் | வகைப்பாடு | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | சிங்காடிவாக்கம் | கிராம நத்தம் | 100 |
| 2 | காஞ்சிபுரம் | குண்டுகுளம் | கிராம நத்தம் | 58 |
| 3 | வாலாஜாபாத் | ஊத்துகாடு | கல்லாங்குத்து | 76 |
| 4 | திருப்பெரும்புத்தூர் | காட்ரம்பாக்கம் | தரிசு | 31 |
| 5 | உத்திரமேரூர் | மலையாங்குளம் | தரிசு | 178 |
| | | | மொத்தம் | 443 |

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 02– பழங்குடியினர் நலன் – 277 – கல்வி – மத்திய அரசு திட்டங்கள் – SD – அழிந்துவரும் நிலையிலுள்ள பழங்குடியினர் மேம்பாடு – 309 – உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை
(IFHRMS த.தொ.கு. 2225 02 277 SD 30903)" (ரூ.13,54,50,000/-)

"4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு - 02 - பழங்குடியினர் நலன் - 800 ஏனைய செலவு - மாநிலச் செலவினங்கள் AA – பழங்குடியின மக்கள் அதிகமாக வாழும் கிராமப் பகுதிகளில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் - 416 பெரும் பணிகள் – 01 பெரும் பணிகள்.
(IFHRMS DPC: 4225-02-800-AA-41601) (ரூ.3,71,81,490/-)

6. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-15 அவர்களுக்கு வழங்கிட பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேற்படி தொகையில், செலவினம் போக மீதித் தொகை இருப்பின், அதனை அரசு கணக்கில் திரும்ப செலுத்தவும், பணிகள் நடைபெறுவது குறித்த பருவ அறிக்கையினை அனுப்பவும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 4-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான செலவினத்தை பயன்படுத்தியதற்கான சான்றினை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.12532/நிதி (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)/2022, நாள் 16.03.2022-இல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம்.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், காஞ்சிபுரம்.
இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-600 015
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-600 018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-600 008.
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
நிதி (ஆதி(ம)பந / வ.செ.பொது-II] துறை, சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்
(ஆதிந5/அந(மு1)துறை, சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
முதன்மை செயலாளர் அவர்களின் தனிச் செயலர், சென்னை-600 009.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/3/2022
பிரிவு அலுவலர்
18/03/2022